இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 30-07-2024

# நிதி ஆயோக்கை கலைத்து விடுங்கள்

**2014 ஆம் ஆண்டு முதல் முறை பிரதமர் ஆனபோது மோடி செய்த முதல் செயல், அதுவரை இருந்த திட்ட கமிஷனைக் கலைத்தது தான். மாநில முதலமைச்சர்கள் கூடிப் பேசி தங்களது கோரிக்கைகளை முன் வைத்து பெறும் அமைப்பாக அது இருந்தது. வந்ததும் அதனைத் தான் கலைத்தார். அதன் பிறகு அவர் உருவாக்கியது தான் இந்த 'நிதி ஆயோக்'.**

முதலமைச்சர்களிடம் கலந்தாலோசனை செய்வது இல்லை. அவர்களாக திட்டங்களை அறிவிப்பார்கள். ஒப்புக்கு ஒரு கூட்டம் நடத்துவார்கள். அது 5 நிமிடம் நேரம் கொடுப்பார்கள். அவ்வளவு தான் கூட்டம் கலைந்து விடும். இது தான் அவர்கள் மாநிலங்களை நடத்தும் லட்சணம் ஆகும்.

தமிழ்நாட்டுக்கு எந்தப் புதிய திட்டத்தையும் அறிவிக்காத, பழைய திட்டங்களுக்கும் நிதியை ஒதுக்காத ஒரு நிதி நிலை அறிக்கையை நிர்மலா சீதாராமன் வாசித்தார். ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதியைக் கூட அவர்கள் ஒதுக்கவில்லை. இந்த நிலையில், 'நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவது இல்லை' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இதையே இந்தியாவும் வழிமொழிந்தது. நேற்றைய தினம் (27 ஆம் தேதி) நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் 10 மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை.

**தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, பீகார், டெல்லி, பஞ்சாப் இமாசலப் பிரதேசம், ஜார்கண்ட், புதுவை ஆகிய மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை. 26 முதலமைச்சர்கள் என்றால் அதில் 10 பேர் கலந்து கொள்ளவில்லை. பாதியளவுக்கு கொஞ்சம் தான் குறைவு. இதில் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமாரும் கலந்து கொள்ளவில்லை. மோடி ஆட்சியைத் தாங்கும் இருவரில் ஒருவர் நிதிஷ் குமார். அவரே போகவில்லை. இத்தனைக்கும் அவரைச் சமாதானப் படுத்த ஏராளமான நிதிகளை பீகாருக்கு வழங்கி இருக்கிறது பா.ஜ.க. அரசு. புதுவையில் பா.ஜ.க. ஆதரவுடன் தான் முதலமைச்சராக இருக்கிறார் ரங்கசாமி. அவரும் போகவில்லை. இந்தளவுக்குத் தான் நிதி ஆயோக் என்ற அமைப்புக்கு மரியாதையே கிடைக்கிறது. இருக்கிறது.**

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அக்கூட்டத்தில் கலந்து கொண்டாலும், அவருக்கு உரிய அளவில் பேசுவதற்கான இடமளிக்கப்படவில்லை. அவர் வெளிநடப்பு செய்திருக்கிறார். தனக்கு முன்னால் பேசியவர்களுக்கு எல்லாம் 10 முதல் 20 நிமிடங்கள் பேச அனுமதி கிடைத்ததாகவும், தனக்கு 5 நிமிடம் தான் ஒதுக்கப்பட்டது என்றும் மம்தா சொல்லி இருக்கிறார். 10 மாநில முதலமைச்சர்கள் புறக்கணித்த நிலையில் அவர்களின் பிரதிநிதியாகக் கருதி முதலமைச்சர் மம்தாவுக்கு கூடுதல் நேரம் ஒதுக்கி இருக்க வேண்டும். எதிர்க்கட்சி முதலமைச்சர்களின் கோரிக்கைகள் என்ன என்பதைச் சொல்வதற்கான வாய்ப்பை மம்தாவுக்கு கொடுத்திருக்க வேண்டும். அத்தகைய பரந்த உள்ளத்தை பிரதமர் மோடியிடமோ, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடமோ எதிர்பார்க்க முடியாது.

10 மாநில முதலமைச்சர்கள் வராத நிலையில், அவர்களுக்கு தனி அழைப்பு விடுத்து பிரதமர் மோடி அறிக்கை வெளியிட்டிருக்க வேண்டும். அதையும் அவர் செய்யவில்லை. ஆனால் வழக்கம் போல தனது வார்த்தைப் பெருமைகளை மட்டும் உதிர்த்திருக்கிறார் பிரதமர்.

"வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களின் கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் தேவை. வளர்ச்சி அடைந்த மாநிலங்கள் தான் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்கும்" என்று பேசி இருக்கிறார் பிரதமர். இது உள்ளத்தில் இருந்து பேசியதாக இருந்திருந்தால் தமிழ்நாட்டுக்கான ஒரு சிறப்புத் திட்டத்தையாவது பிரதமர் அறிவித்திருப்பார். சும்மா உதட்டளவில் பேசிய பேச்சு இது என்பது அவருக்கே தெரியும்.

**மாநில முதலமைச்சர்களை எப்போதாவது அழைத்து பேசி இருக்கிறாரா பிரதமர்? எந்த முக்கியமான பிரச்சினைகளுக்காவது மாநில முதலமைச்சர்களின் கூட்டுக் கூட்டத்தை கூட்டி இருக்கிறாரா பிரதமர்? எத்தனையோ கோரிக்கை மனுக்களை தமிழ்நாடு கொடுத்திருக்கிறதே, அதற்கான முறையான பதில் கொடுத்திருக்கிறாரா பிரதமர்? அவரை மேடையில் வைத்துக் கொண்டு எத்தனையோ முறை, எவ்வளவோ கோரிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் வைத்திருக்கிறாரே, அதற்கெல்லாம் பதில் சொல்லி இருக்கிறாரா பிரதமர்? தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு அவைகளிலும் வைத்த கோரிக்கைகளை செவிமடுத்து கேட்டுள்ளாரா பிரதமர்? எதுவுமில்லை. 'மாநிலங்களின் கூட்டு முயற்சி', 'ஒத்துழைப்பு' என்று பேசுவதற்கான உரிமை இருக்கிறதா அவருக்கு?**

**2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்கப் போகிறார்களாம். இதற்கு 'விக்ஷித் பாரத்' என்று பெயராம். 2024இல் செய்ய வேண்டியதைச் செய்யாமல், 2047 என்று எதற்காக காற்றில் கம்பு சுற்ற வேண்டும்? 'உழும் காலத்தில் ஊருக்குப் போனால் அறுக்கும் காலத்தில் ஆள் தேவையில்லை' என்பது பழமொழி. நிலத்தைக் கவனிக்காமல், அறுவடைக் கணக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார் பிரதமர்.**

நிதி ஆயோக் போன்ற கண்துடைப்பு அமைப்புகளால் எந்தப் பயனுமில்லை. ஒருநாள் கூத்துக்கள் இவை. கோரிக்கைகளைச் சொல்லவும், அதற்கு உரிய பதிலை ஒன்றிய அரசு சொல்லவுமான ஜனநாயக அமைப்புகள் தேவை. மாநில முதலமைச்சர்களின் கலந்தாலோசனைகளோடு ஒன்றிய ஆட்சியை நடத்தாமல் போனால் இழப்பு பா.ஜ.க.வுக்குத் தான். மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய இடத்தில் நிர்மலா சீதாராமன்கள் இல்லை. மோடி தான் இருக்கிறார்.

**மாநிலங்களைப் புறக்கணித்துவிட்டு, மாநில முதலமைச்சர்களை ஒதுக்கிவிட்டு, கண்துடைப்பு கருத்தரங்குகளில் பேசுவதன் மூலமாக இந்தியாவை வளர்த்துவிட முடியாது.**

# மேட்டூர் அணை திறப்பு : முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

முதல் பக்கத் தொடர்ச்சி...

நீரினை செம்மையாகப் பயன்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் (28.07.2024) மாலை 3 மணியளவில் மேட்டூர் அணை திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதற் கட்டமாக, 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு, நீர் வரத்தைப் பொறுத்து படிப்படியாக உயர்த்தப்படவுள்ளது. இதற்கான முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நீர் திறந்துவிடப்படும். தற்போது பயிரிடப்பட்டுள்ள குறுவைப் பயிர்களுக்கும், ஆடிப்பெருக்கு விழாவை மக்கள் உவகையோடு கொண்டாடுவதற்கும், ஏரிகள் மற்றும் குளங்களில் சேமிப்பதற்கும் ஏற்றவாறு காவிரி நீர் திறந்துவிடப்படவுள்ளது. இந்த நீரை விவசாயிகள் நல்ல முறையில் பயன் படுத்தவும், ஏரிகள் மற்றும் குளங்களில் நீரை சேமித்து வைக்கவும், நிலத்தடி நீரை செறிவூட்டவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

**ஆடிப் பெருக்கு விழா பாதுகாப்பு ஏற்பாடுகள்!**

குறிப்பாக, ஆடிப்பெருக்கு விழாவிற்காக ஆற்றங்கரைகளில் மக்கள் கூடும் இடங்களில் அறிவிப்புகளை முன்னதாக மேற்கொண்டு, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும், விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் சிறப்பு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமெனவும், திறந்து விடப்படும் நீரைச் சேமித்து வைப்பது மற்றும் பயன்படுத்துவது குறித்து நீர்வளத் துறையும், மாவட்ட ஆட்சியர்களும் கவனமாகத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டுமெனவும், அதிக அளவு நீர் வெளியேற்றப்படும் வாய்ப்புள்ளதால் கரையோரங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள்.

**அமைச்சர் துரைமுருகன் - அதிகாரிகள் பங்கேற்பு!**

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வேளாண் துறை மற்றும் நீர்வளத் துறையின் அரசு உயர் அலுவலர்களும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## முதல்வரின் உத்தரவின்படி - மேட்டூர் அணை திறப்பு!

# அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்க ஆட்சியர்களுக்கு அறிவுரை!

## வருவாய் - பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை!

**சென்னை, ஜூலை 30-**

**முதலமைச்சர் அவர்களது உத்தரவின் படி மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படுவதால் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

*அவரது அறிக்கை வருமாறு :-*

*முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மேட்டூர் அணையிலிருந்து நீரை திறந்து விடுவது குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நேற்று முன்தினம் (28.7.2024) ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.*

*கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு அதிகப்படியான நீர் வரத்து இருந்த நிலையில், காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படும் நேர்வில், கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாத்திட மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் 27.07.2024 மற்றும் 28.07.2024 நாளிட்ட கடிதங்களில் காவிரி ஆற்றுப்படுகை மாவட்ட ஆட்சியர்களுக்கு பின்வரும் அறிவுரைகளை வழங்கியுள்ளார்.*

*மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவது குறித்து பரவலாக விளம்பரப்படுத்துவதன் மூலம் பொதுமக்களை முன்கூட்டியே எச்சரிக்க வேண்டும்.*

*நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைத்திருப்பதோடு தங்க வைக்கப்படும் நபர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்.*

*தேவைப்படின் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளிலிருந்து பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்க வேண்டும்.*

**செல்ஃபி எடுப்பதைத் தவிர்க்கவும்!**

*காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்படும் நேர்வில் பொதுமக்கள் ஆற்றில் குளிப்பது, நீந்துவது, மீன் பிடிப்பது மற்றும் பிற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆகியவற்றை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*



*ஆபத்தான இடங்களில் நின்றுகொண்டு செல்ஃபி எடுப்பதைத் தவிர்க்க பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.*

*குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாகவும், ஆறு, கால்வாய் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு குழந்தைகள் செல்வதை தவிர்க்கவும், பெற்றோருக்கு உரிய அறிவுரை வழங்க வேண்டும்.*

*காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்படும் போது கால்நடைகளுடன் நீர் நிலைகளை கடந்துசெல்வதை தவிர்க்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.*

*பொதுமக்களுக்கு எச்சரிக்கைச் செய்திகளை உரிய நேரத்தில் கொண்டு சேர்த்திட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.*

*மேலும், ஆற்று நீரை கடந்து செல்ல பயன்படும் தரைப்பாலங்கள் மற்றும் பிற பாதைகளை கண்டறிந்து பொதுமக்களை எச்சரிக்க வேண்டும்.*

**தயார் நிலையில் நிவாரண முகாம்கள்!**

*முன்னெச்சரிக்கை வழங்கும்போது பொதுமக்களிடையே எவ்விதமான தேவையற்ற அச்ச உணர்வும் ஏற்படாமல் கவனமுடன் செயல்பட வேண்டும் மேலும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதால், பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்க நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.*

*தென்மேற்கு பருவமழையின் காரணமாக பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினைச் சார்ந்த 365 வீரர்கள் நீலகிரி, கோயம்புத்தூர் திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் முன்கூட்டியே நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்த பேரிடர் மீட்பு படைகள் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.*

*பேரிடர் தொடர்பான தகவல்களை துறை அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில், மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றன.*

*பொதுமக்கள் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும், வாட்ஸ் அப் எண். 94456 69848 மூலமாகவும் தொடர்பு கொண்டு புகார்களை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

*இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

## பாரீஸ் ஒலிம்பிக்:

# டேபிள் டென்னிஸ் முதல் சுற்றில் மனிகா பத்ரா வெற்றி!

பாரீஸ், ஜூலை 30-

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் மொத்தம் 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக் கணக்கான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

பேட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து முதல் சுற்றில் வென்றார். பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தகுதிச்சுற்றில் இந்தியாவின் ரமிதா ஜிண்டால் வென்றார்.

துப்பாக்கி சுடுதல் 10 மீ ஏர் ரைபிள் இறுதிச்சுற்றில் இந்திய வீராங்கனை மானு பாகெர் வெண்கலம் வென்று அசத்தினார்.

இந்நிலையில், டேபிள் டென்னிஸ் பிரிவின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மனிகா பத்ரா, கிரேட் பிரிட்டனின் அன்னா ஹர்சியுடன் மோதினார். இதில் பத்ரா 41 என்ற புள்ளிக் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



தி.மு.க.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 3, 4, மற்றும் 8 ஆகியவற்றுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடத்தில் நடைபெறவிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 30/07/2024 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | 3, 4 மற்றும் 8 | ஸ்ரீ குமரன் மஹால், பெங்களூரு–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை, குந்தாரப்பள்ளி கூட் ரோடு, கிருஷ்ணகிரி மாவட்டம். |

அந்தந்த மண்டலங்களைச் சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 27–07–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி